முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.49/2021

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் நாள் திங்கள்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன் படி பிரமாணம் செய்விக்கப்பட்டது,

**வா.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | ஜாதி | |
| தந்தையார் பெயர் | மாரிமுத்து | மதம் | |
| கிராமம் | எடமேலையூர் | தொழில் | |
| வட்டம் | மன்னார்குடி | வயது | 58 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

1) 23.07.2018 தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் **வா.சா.ஆ.1**.

2) 23.02.2021 தேதியிட்ட எனது வழக்கறிஞர் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2**.

3) மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் மறுத்து திரும்ப

வந்த அஞ்சல் கவல் அசல் **வா.சா.ஆ.3**.

தாவாபடி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.